# அக்குரஸ்ஸ பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 24 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 21 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அக்குரஸ்ஸ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

--------------------------------------------

மீளாய்வாண்டிக்காக சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் கணக்குகள் தயாரிக்கம் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கருதுகோள்கள் பற்றிய குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணிகள் மற்றும் கட்டிடங்களின் கணிப்பீட்டின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 28 காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஐந்தொகையில் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 6,390,000 தொகை பெறுமதியான டபள் கப் வண்டி 2014 திசெம்பர் 09 திகதி கிடைத்திருந்ததுடன் அச் சொத்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 159,718 இற்கான மூலதனச் செலவுகள் மீண்டுவரும் கணக்குகளின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து 04 வாகனங்கள் சபைக்கு நன்கொடையாக கிடைத்திருந்தன. அவ் வாகனங்களின் கிரயப் பெறுமதி ரூபா 6,190,000 தொகை எனினும் மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டுவண்டியின் கீழ் மூலதனப்படுத்தியிருந்த தொகை ரூபா 6,975,000 ஆக காணப்பட்டமையால் மிகையாக கணக்கீடு செய்திருந்த தொகை ரூபா 776,000 தொகையாகும்.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 209,500 இற்கான இரண்டு நிலையான சொத்து விடயங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு பிரதான பேரேட்டின் பிரகாரம் ஏற்பாடு செய்திருந்த முத்திரைக் கட்டண கடன்பட்டோர் பெறுமதி ரூபா 5,284,240 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போது ரூபா 7,336,840 தொகை கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் மிகையாக கிடைத்திருந்த ரூபா 2,052,600 இற்கான தொகைகள் கடன்பட்டோர் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதிக் கணக்கு செலவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன்பட்டோர் பெறுமதி அதே தொகையால் குறைந்துள்ளது.

(எ) மீளாய்வாண்டிற்காக பிரதேச சபைக்குக் கிடைத்திருந்த மூலதன உதவி ரூபா 2,853,600 தொகை மூலதன உதவி வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட வேண்டும் எனினும் மூலதன உதவி கடன்பட்டோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) தென் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து சபை அமர்வுப் படி மீளளிப்புச் செய்யும் போது சபையின் அங்கத்தவர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கியிருந்த மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான தவணைப் பணம் என ரூபா 408,650 தொகையொன்று அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதனை வருமான உதவியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது சபையினால் படியாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 135,750 இற்கான தொகை குறிப்பிட்ட செலவு விடயத்துக்கு வரவு வைக்கப்படாமல் 105(9)(ii) இலக்கம் கொண்ட ஏனைய சேவைகளுக்காக அரசாங்கத் திணைக்களங்களுக்கு கொடுப்பனவு செலவு விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) பிரதான பேரேட்டில் வட்டி செலுத்துதல், பங்கிலாபம் மற்றும் மிகை ஊதியக் கணக்கு (செலவு விடயம் 506) இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செலவுகள் என ரூபா 1,277,460 தொகை வருமானச் செலவுக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,244,460 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 33,000 ஆகும்.

(ஓ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நீர் வேலைகளுக்கான களஞ்சிய இருப்பு ரூபா 158,857 தொகை எனினும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இருப்பு பட்டோலையின் பிரகாரம் பெறுமதி ரூபா 182,220 ஆக காணப்பட்டமையால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 23,363 ஆகும்.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான எட்டு கணக்கு விடயங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரதான பேரேட்டு கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 68,666,141 ஆக காணப்பட்டதுடன் பட்டோலையின் பிரகாரம் கூட்டு மீதிகளின் பெறுமதி ரூபா 62,555,479 ஆக காணப்படாமையால் வித்தியாசம் ரூபா 6,110,662 ஆகும்.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 7,824,337 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,054,760 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 117,782,741 பெறுமதியான 09 கணக்கு விடயங்கள் தொடர்பான காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடு, பொறியும் பொறித்தொகுதியும் பதிவேடு, கணக்கீட்டு சபை அறிக்கைகள், நாளது வரை மற்றும் முறைப்படி பேணப்பட்டுள்ள வாகனப் பதிவேடு, பொருட் பதிவேடு, கடன்கொடுத்தோர், பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு அறிக்கை, முதலீட்டு பதிவேடு, தனிப்பட்ட கடன் மீதிகளைக் காட்டக் கூடிய பட்டோலைகள் ஆகியன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,282,636 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,683,321 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

-------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 3,705 | 3,668 | 1,239 |
| வாடகை | 5,860 | 5,399 | 4,639 |
| ஏனைய வருமானங்கள் மற்றும் உதவி | 45,538 | 107,182 | 63,192 |

2.2.2 வீத வரி

-------------

(அ) 2014 ஆண்டிற்காக வீத வரி பில்போடப்பட்டவை மிகைக் கட்டணத்துடன் ரூபா 2,349,356 ஆக காணப்பட்டதுடன் அத் தொகையில் ஆண்டின் போது பெறுவனவுகள் ரூபா 1,857,681 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டு தொடர்பாக வீதவரி அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 79 ஆகும். 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு வீத வரி மீதி ரூபா 1,489,019 ஆக காணப்பட்டதுடன், அந் நிலுவைத் தொகையில் அறவிடப்பட்ட தொகை ரூபா 784,100 தொகையாகும். இதன் பிரகாரம் நிலுவைத் தொகை அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 52 ஆகும்.

(ஆ) பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய வீத வரி மற்றும் ஏக்கர் வரி குறிப்பிட்ட காலப் பகுதியில் செலுத்தப்படாவிடின் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(i)(ii) ஏற்பாடுகளின் பிரகாரம் அந் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 1,396,319 இற்கான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது.

2.2.3 ஏக்கர் வரி

----------------

மீளாய்வாண்டிற்கான ஏக்கர் வரி பில்போடப்பட்டவை காணப்படவில்லை. அத்துடன் 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 45,304 ஆகும். ஆண்டின் போது அறவீடுகள் ரூபா 11,704 தொகையாகும். இதன் காரணமாக நிலுவை வரி அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 25 ஆகும்.

2.2.4 வாடகை

---------------

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடை வாடகை தொகை ரூபா 4,565,987 ஆக காணப்பட்டதுடன் அத் தொகையில் முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 3,303,591 ஆகும். அதன் பிரகாரம் அந்த நிலுவை வருமானத்தில் நூற்றிற்கு 72 உம் முன்னைய ஆண்டுகள் தொடர்பானவை.

(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தரை வாடகை ரூபா 551,096 ஆக காணப்பட்டதுடன் அத் தொகையில் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக நிலுவையாக காணப்பட்ட தொகை ரூபா 492,375 ஆக காணப்பட்டமையால் அப் பெறுமதி நிலுவை தரை வாடகை மீதியில் நூற்றிற்கு 89 ஆகும்.

2.2.5 நீர்க் கட்டணம்

--------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 100,763 ஆகும். இந்த நிலுவை மீதியில் முன்னைய ஆண்டுகளுக்காக நிலுவை தொகை ரூபா 16,639 காணப்பட்டதுடன் அத் தொகை நிலுவை மீதியில் நூற்றிற்கு 16 ஆகும்.

2.2.6 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய தொகை தரப்பட்டுள்ளது.

| | ரூபா. |
|---|---|
| நீதி மன்றத் தண்டப் பணம் | 677,847 |
| முத்திரைக் கட்டணம் | 1,391,243 |

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

------------------------------------------

3.1.1 சபைக்குச் சொந்தமான வீதிகளின் நிருவாகம்

---------------------------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக அனுமதிக்கப்பட்டிருந்த பாதீட்டில் சபைக்கு சொந்தமான பாதைகளின் எண்ணிக்கை, நீளம், அகலம் மற்றும் சபையினால் பராமரிக்கப்பட வேண்டிய மதகுகள் மற்றும் பாலங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 24 இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் சபைக்குச் சொந்தமான பாதைகளை பற்றிய விபரங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். எனினும் 2005 ஆண்டின் பின்னர் சபை இனங்கண்டிருந்த புதிய பாதைகள் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சபைக்குச் சொந்தமான பாதைகள் தொடர்பாக ஒவ்வொரு பாதையின் நீளம், அகலம், ஆரம்பிக்கும் இடம் மற்றும் முடிவடையும் இடம் தார், கொங்கிரீட், சரளைக் கற்கள் என பாதையின் தன்மை மற்றும் வீதிக் கோடு ஆகிய தகவல்களை குறிப்பிடுவதன் மூலம் பாதைகளுக்கான பதிவேடு நாளது வரை பேணியிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

---------------------------------------------------

3.2.1 மேலதிக நேரப்படி கொடுப்பனவு

-----------------------------------------------------

சபையின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 990,960 தொகை ஒன்று மேலதிக நேரடிப் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

மேலதிக நேர வேலைக்காக அங்கீகார தாபனக் கோவையின் அத்தியாயம் X பிரிவு 3 இன் பிரகாரம் அனைத்து மாதங்களிலும் மேலதிக நேர வேலை வரையறை, அங்கீகரிக்கப்பட்ட மேலதிக நேர மணித்தியாலங்கள், பூர்த்தி செய்ய வேண்டிய வேலை மற்றும் அலகுகள் தொடர்பான விபரங்கள் மற்றும் மேலதிக நேர சேவைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் விபரங்கள் என்பன மேலதிக நேரப்படி கொடுப்பனவு உறுதி சான்றுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

3.2.2 பதவியணிக் கடன்

------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு, ஓய்வு பெற்றுள்ள, சேவை விட்டு சென்றுள்ள, சேவையை விட்டு விளக்கியுள்ள பன்னிரண்டு ஊழியர்களிடம் ரூபா 56,391 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3.2.3 நீர் செயற்திட்டத்தை நீர் வடிகாலமைப்பு சபைக்கு சாட்டுதல்

----------------------------------------------------------------------------------------------------

2010 ஆண்டின் போது தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபைக்கு நீர் செயற்திட்டத்தை ஒப்படைக்கும் போது நீர் நுகர்வோரிடம் ரூபா 100,763 தொகை ஒன்று நிலுவையாக காணப்பட்டதுடன் நீர் வைப்புக் கணக்கில் ரூபா 825,920 மீதி ஒன்று தீர்க்கப்படாமல் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீண்ட காலம் முதல் மின்சாரக் கணக்கில் செயற்படாது காணப்படும் ரூபா 61,882 ஆன தொகையை தீர்த்திருக்கவில்லை.

3.4 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| மூன்றாம் தரம் | 01 | 01 | - | - |
| இரண்டாம் தரம் | 30 | 27 | 03 | - |
| ஆரம்ப தரம் | 47 | 34 | 13 | - |
| ஏனையவை | - | 10 | - | 10 |
| | 78 | 72 | 16 | 10 |

மீளாய்வாண்டிற்கான உள்ளூராட்சி ஆணையாளரினால் பதவியணிச் சம்பளம் மற்றும் மந்திரிமார் படி ஆக ரூபா 18,556,966 தொகை ஒன்று மீளளிப்பு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான சம்பளம் மற்றும் மந்திரிமார் படி ஆக ரூபா 22,800,632 செலவிடப்பட்டிருந்தமையால் ரூபா 4,243,666 இற்கான தொகை ஒன்று சபை நிதியத்திற்கு செலவு பொறுப்பு ஒன்றாகியுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

-------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் இடையே கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது சபையின் பாதீடு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 அகக் கணக்காய்வு

-------------------------------

அகக் கணக்காய்வு வியடங்களுக்காக தனிப்பட்ட பிரிவு ஒன்று சபையில் செயற்பட்டிருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

----------------------------------------------------------------------------

சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி இருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) களஞ்சிய நிருவாகம்

(ஊ) மனித வள முகாமைத்துவம்